# பாவலர் துரையப்பா பிள்ளை

## நினைவுப் பேருரை

---

## மகாஜனாவின் சிற்பியின் தலைமைத்துவப் பொற்காலத்தில் கல்லூரியின் சமூக மயமாக்கல் பணிகள்


திருமதி கோகிலா - மகேந்திரராஜா

(உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்)


2002.06.24

# மகாஜனாவின் சிற்பியின் தலைமைத்துவப் பொற்காலத்தில் கல்லூரியின் சமூக மயமாக்கல் பணிகள்

~ சேகஸ்வர மகேந்திரன் ~

"தந்தை தொடக்கித்தருமோர் சிறுபள்ளி
இந்த விதமாய் எழும்பி இருக்கிறதே
வாயில் பெரிது மதில்கள் நிலம் பெரிது
கோயில் பெரிது வகுப்பறைகள் கூடங்கள்
ஆயும் இடம் நூலகம் அரங்கு மண்டபங்கள்
யாவும் பெரிதே"

என்று கல்லூரியின் கட்டிடத்தை 1960 களில் பார்த்து வியந்த மகாகவி து.உருத்திரமூர்த்தி அக் கோயிலின் சிற்பியான தெ.து.ஜெயரத்தினம் அவர்களைப் பற்றிப் பேசும்போது

"வந்து குவிந்து வளரும் இளையவர்கள்
சிந்தை தெளிந்து திருமனிதர் ஆம்படிக்காய்
ஆண்டாண்டு காலம் அரைக் கணமும் தாழாது
வேண்டும் பணிகள் எவையும் விரைந்தெடுக்க
நிற்கும் வலிமை நெடிது"

என்று கூறுகையில் மகாஜனாவுக்குப் படிக்க வந்த மாணவர்கள் அதற்கு முன் தெளிவற்ற சிந்தனை உடையவர்களாய் இருந்தாலும்,

இங்கு வந்த பிறகு எல்லாம் தெளிந்து திருமலிதர் ஆகிச் சமூகத்திற்குப் பயனுடையோராய் வெளியேறும் நிலையை உறுதிபடச் சுட்டுகிறார்.

மகாகவி சொல்கின்ற இந்த விடயம் இப்படித்தான் நடந்தது.

தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் 1910ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் திகதி ஒரு பெரும் பரபரப்பு ! காரணம் அப்பாடசாலையின் தலைமையாசிரியர் பதவியை வகித்து வந்த சாமுவேல் கற்சிங்கு துரையப்பாபிள்ளை தெயிலர் மிஷனுடைய தொடர்பை முறித்துக் கொண்டு தமது பதவியைத் துறந்தார். அங்குள்ள மற்றைய ஆசிரியர் நால்வருள் இருவரும் பெரும்பாலான மாணவர்களும் அவர்களைத் தொடர்ந்து வெளியேறினர். வேறு வசதியான இடமின்மையால், விசாலமான சொந்த வீட்டில் - இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வரும் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் சேர்ந்து உயர்கல்வியைப் பெறும் வாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில் வளர்ந்து முழு இலங்கையிலும் தலை சிறந்து விளங்கும் மகாஜனக் கல்லூரியாகப் பின்னர் பரிணமிக்கப்போகும் சிறு பள்ளிக்கூடம் ஆரம்பமானது.

1921இல் மூன்றாம் வகுப்பில் இப்பாடசாலையில் மாணவராகச் சேர்ந்த ஜெயரத்தினம் (துரையப்பாபிள்ளையின் மைந்தன்) 1932இல் மகாஜனாவின் ஆசிரியரானார். 20.05.1945இல் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அவர் 31.12.70இல் ஓய்வு பெறும் வரை மகாஜனாவின் பொற்காலத்தை உருவாக்கினார். (1969இல் நான் பல்கலைக்கழகம் புகுந்தேன் ) ஏறத்தாழ 50 வருடங்கள் பாடசாலையோடு வளர்ந்தும் பாடசாலையை வளர்த்தும் வந்த அவரது வரலாறும் கல்லூரியின் வரலாறும் அத்துவிதமாகக் கலந்துள்ளன. கல்லூரியில் அவர் தொட்ட இடமெல்லாம் துலங்கிற்று. 130 பிள்ளை 3 ஆசிரியர்



எனத் தந்தையார் தொடக்கிய பள்ளியை 1900 மாணவர் 64 ஆசிரியர் வானுயர்ந்த கட்டிடம், சமூக மயமாக்கல் நிலைமைகள், ஆளுமை விருத்திகள் என அந்த விதமாய் எழுப்பித்தந்தவர் மகன்.

இந்த நிலையை அவரால் எப்படி ஏற்படுத்த முடிந்தது என்பதையும் மகாகவியே கூறுகிறார்.

"கட்டி எழுப்பிக் கவனித்துக்
காத லெல்லாம் கொட்டிப் புதுக்கிக்
கொடுக்கும் திறம் அரிது"

கட்டிடங்களை மட்டுமல்ல. மாணவர் உள்ளங்களையும் அவர் கட்டி எழுப்பினார். கவனித்தார். காதலெல்லாம் கொட்டிப் புதுக்கிக் கொடுத்தார். அங்கு படித்த மாணவர்கள் அனைவரையும் அவர் காதலித்தார். இந்த இடத்தில் "காதல்" என்பதற்கு சமகால உளவியலாளர்கள் தரும் வரைவிலக்கணத்தை நோக்குவோம்.

"Love is that condition in which happiness of another person is essential to your own"

மற்றவரது வளர்ச்சியும் விருத்தியும் மகிழ்ச்சியும் நிறைவும் ஜெயரத்தினம் அவர்களுக்கு அவசியமாய் இருந்தன என்றால் அவர்கள் மாணவர் அனைவரையும் காதலித்தார் என்பதே பொருள்.

இந்துக் கல்லூரியின் முன்னை நாள் அதிபர் என் சபாரத்தினம் அவர்கள் இதே கருத்தை இவ்வாறு சொல்வார்.

"It was his lamp of love. That was how he was able to gather round him a band of devoted teachers"

இவ்வாறு ஒருவர் தனது நிறுவனத்திலுள்ள மாணவர் அனைவரையும் அன்பு செய்ய வேண்டுமாயின் அவருக்குச் சில தகைமைகள் இருக்க வேண்டும்.

Erich Fromm என்ற உளவியலாளர் கூறுகிறார் "தன்னை முழுமையாக அறிந்தவர்களால் மாத்திரமே சுயதிறன் நிறைவுத் தேவைப் பூர்த்தி செய்து கொண்டவர்களால் மட்டுமே மற்றவர்களை நிறைவாக அன்பு செய்ய முடியும்" அந்தத் தகைமை அவருக்கு இருந்தது.

பாடசாலையானது சமூகம் என்ற பாரிய அமைப்பினுள் அமைந்துள்ள ஒரு உப அமைப்பாகும். பாடசாலையின் அகத்தேயும் புறத்தேயும் சிறந்ததொரு திட்டத்திற்கேற்ப ஒரு சுற்றாடல் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளல் ஒரு அதிபரின் பிரதான முகாமைத்துவப் பணியாகும். தனக்குள் மறைந்திருந்த முகாமைத்துவ ஆளுமையை முழுமையாக வெளிக்கொணர்ந்த அருமையான அதிபர் ஜெயரத்தினம் அதனால்தான் இந்தப் பிரதேசத்திலேயே 'Principal' என்று சொன்னால் அது ஜெயரத்தினம் தான் என்ற விளக்கம் மிக நீண்ட காலம் இருந்தது.

ஒரு நாட்டின் வருங்காலம் அந்நாட்டுப் பாடசாலைகளின் வகுப்பறையிலேயே உருவாக்கப்படுகிறது. பாடசாலை விரும்பினால் ஏபிரகாம் லிங்கன்களையும் உருவாகலாம். அலிபாபாக்களையும் உருவாக்கலாம். மனிதன் தன் வாழ்வில்

1. சிறந்த குடும்பத் தலைவனாக
2. சமூகத்திற்கு வளம் சேர்க்கும் சான்றோனாக
3. தேசிய ஒருமைப்பாட்டுணர்வு கொண்ட தேசப் பிரஜையாக
4. உலகம் ஒரு குடும்பம் என்ற உணர்வு கொண்ட உலகப் பிரஜையாக உருவாக உதவுவது பாடசாலை.



ஆனால் ஆங்கிலேயர் காலத்தின் பின் சுதந்திர இலங்கையில் தொடர்ந்து வந்த கல்வி முறை பிள்ளைகளுக்கு வெறும் ஏட்டுக் கல்வியைத் தான் கொடுத்ததே தவிர அவர்களின் சமூக ஆளுமையை வளர்த்தெடுக்கவில்லை என்பதை மிகத் தாமதமாகவே உணர்ந்து கொண்ட எமது நாட்டின் அறிஞர்கள் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் ஒன்பது தேசிய குறிக்கோள்களிலும் இந்தச் சமூக ஆளுமையின் தேவையைக் குறிப்பாய் எடுத்துரைத்துள்ளனர்.

தேசியப் பிணைப்பினையும் தேசிய முழுமைப் பாட்டினையும் தேசிய ஒருமைப் பாட்டினையும் எய்தல், பரந்தளவிலான சமூக நீதியை நிலை நாட்டல், ஓம்பக் கூடியதொரு வாழ்க்கைப்பாங்கை ஏற்படுத்தல், கண்ணியம், திருப்தி தன்னிறைவு என்பவற்றை ஏககாலத்தில் தரக் கூடிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கல், மனித வள அபிவிருத்திக்கான முயற்சிகளில் யாவரும் பங்கு கொள்வதற்கான பல்வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்தல் நாட்டின் மேம்பாட்டுக்கான முயற்சிகளில் பங்கு கொள்வதற்கு ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் ஆழ்ந்த இடையறாத அக்கறையைத் தொடர்ந்து பேணுதலை உறுதி செய்தல், இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போன்றதொரு விரைவாக மாறிவரும் உலகில் மாறும் நிலைக்கேற்ப இணங்கி வாழக்கற்றல், மாற்றத்துக்கு இணக்கம் செய்கின்ற மூலகங்களைச் சிறப்பாக்கலும் வளர்த்தலும், காப்பு உணர்வையும் உறுதிப்பாட்டு உணர்வையும் எய்தும் வகையில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமையைச் சமாளிக்கும் தகைமையை வளர்த்தல் ஆகியனவே அக்குறிக்கோள்களாகும்.

இந்தக் குறிக்கோள்கள் அனைத்தும் மிக ஊன்றி நோக்கத்தக்கவை. ஏனெனில் மனிதன் ஒரு சமூகவிலங்கு. வேறு மனிதர்

அற்ற ஒரு வாழ்வை எம்மால் ஒரு போதும் கற்பனை செய்து பார்க்க முடியாது. Robinson Crusoe போலத் தனித்து வாழ யாரால் முடியும்?

நாம் எமது வாழ்வு முழுவதும் பிறப்புமுதல் இறப்புவரை பல விடயங்களுக்காகவும் ஒருவரில் ஒருவர் தங்கித்தான் உள்ளோம்.

உலகம் முழுவதிலும் பல சமூகங்கள் உள்ளன. இந்தச் சமூகம் தனி மனிதனில் பாரிய செல்வாக்குச் செலுத்துகிறது. மனிதர்கள் எவ்வாறு ஒருவரோடு ஒருவர் உறவாடுகிறார்கள், எவ்வாறு ஒருவரால் ஒருவர் பாதிக்கப்படுகிறார்கள் என்பது சுவாரசியமான விடயம். ஒரு பாடசாலை எப்படிச் சமுதாயத்தை மாற்றுகின்றது - சமுதாயம் எப்படிப் பாடசாலைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பவை இன்றும் சுவாரசியமான விடயங்கள்.

அதிபர் தெ.து. ஜெயரட்ணம் அவர்கள் காலத்தில் கல்லூரியில் நடைபெற்ற உயர்தர வகுப்புக்கான இரவு விருந்துகளை எண்ணிப்பார்க்கிறேன். அவற்றுக்கு ஒரு சமூக மயமாக்கல் நோக்கம் தெளிவாக இருந்தது. நான் உயர்தர வகுப்பில் பயின்ற காலத்தில் (1967 - 1968) இவ் விருந்துக்கு ஆசிரியர் ச.பொ.கனகசபாபதி அவர்கள் பொறுப்பாசிரியராக இருந்தார். ஒரு நிகழ்வைச் செம்மையாகச் செய்வதற்கு ஒரு குழு எவ்வாறு திட்டமிடும் எனக் கற்றுக் கொண்டோம். திட்டமிடல் ஒழுங்காகவும் விளைத்திறனுடனும் அமையும் போது விடயம் வெற்றிகரமாக அமைவதைப் பயின்று கொண்டோம்.

பக்கத்திலே ஒரு புதியவர் வந்து அமரும்போது, அவர் சொல்வதை உற்றுக் கேட்கவும், ஒத்துணர்வுப் பதில்களை வழங்கவும் அறிந்தோம். (சீரமியருக்குரிய திறன்கள்) இரவு விருந்து தொடர்பான வழிகாட்டல்களைத் திங்கட்கிழமை ஒன்றுகூடலில் வைத்து அதிபர் அவர்கள் தெளிவாகக் கூறுவார்கள். பலருக்கு முன்னிலையில்



நாகரிகமாகச் சாப்பிடும் ஆற்றலை வளர்த்துக் கொண்டோம். மேலை நாட்டவர்கள் எம்மோடு உணவு அருந்தும் சந்தர்ப்பங்களில் நாமும் முள்ளு, கரண்டி ஆகியவற்றைப் பாவித்துச் சத்தம் கேட்காமல் சாப்பிடும் முறையைப் பெற்றுக் கொண்டோம். மகாஜன மாணவர்கள் உலகின் எப்பகுதிக்குச் சென்றாலும் விரைவில் இசைவாக்கம் பெற்று சமூகமாக வாழக்கூடியவர்கள என்ற பெருமை எம்மை நாடி வந்தது. அன்றைய கல்விமுறையும் ஆங்கில மொழி மூலம் இருந்ததால், ஒன்று கூடல் நிகழ்வுகள், விருந்து நிகழ்வுகள் அனைத்தும் ஆங்கிலத்தில் நடப்பதும் பெரிய அனுகூலமாக இருந்தது. மகாஜனாவில் இருந்து ஒரு மாணவன் வருகின்றார் என்றால் அவர் நல்ல மனப்பாங்குகள் ஆற்றல்கள் ஆகியவற்றோடு சமூக மயமாக்கப்பட்டு வருவார் என்ற நம்பிக்கையில் அவருக்குத் தனியான மதிப்பும் கணிப்பும் பேராதனை, கொழும்புப் பல்கலைக்கழகங்களில் இருந்தன.

“மகாஜனா என்பது ஒரு உன்னதமான கல்விக்கூடம்” என்றுதான் எல்லோரும் சொல்கின்றார்கள். ஆகவே இந்த வாரம் மட்டும் “மகாஜனா ஒரு ஆட்டுப்பட்டி” என்று சொல்லுங்கள் என்று எமது சீனியர் மாணவர்கள் எம்மை றாகிங் செய்தது எனக்கு இன்றும் பசுமையாக நினைவிருக்கின்றது. (அக்காலத்தில் றாக்கிங் அவ்வளவு தான்)

கல்லூரியின் அக்காலச் சமய நிகழ்வுகளை எடுத்துக் கொள்வோம். 1960ஆம் ஆண்டின் அதிபர் அறிக்கையில் கல்லூரியின் சமய நடவடிக்கைகள் பற்றி அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்.

“Religious Education continues to be the focus of all our attentions” மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலின் 17ஆம் திருவிழா கல்லூரியின் உபயம் அதுபற்றி அதிபர்,

"It was a plessure to see almust the entire school engaged in various activities and contributing to the grandeur and success of the festival"

என்று கூறுகிறார். கோயிலுக்குப் போகும் உடை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் இருந்து கோயிலை வணங்கும் முறை வரை இத் திருவிழாவில் நாம் தெளிந்து கொண்டோம். கோயிலில் ஒருவர் எவ்வாறு பிரசங்கம் செய்ய வேண்டும் என்பதைக் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை அவர்களை மாதிரியாகக் கொண்டு புரிந்து கொண்டோம். மகாஜன மாணவர் பலர் பிற்காலத்தில் கோயிலில் நன்கு பேசக்கூடியவர்களாக ஆன முறையை இங்கு நினைவு கொள்ளலாம்.

பாடசாலையில் நடராஜர் ஆலயத்தை அமைப்பதாக முடிவு செய்திருந்த ஒரு காலப்பகுதியில் அது குறித்துத் திரு. ஜெயரத்தினம் அவர்கள்,

"The influence that it can wield on the life and character of the child is tremendous"

என்று கூறினார். அவரது இந்தத் தெளிவான சிந்தனைப் போக்குத்தான் மாணவ ஆளுமையில் வியக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது.

திருக்கேதீஸ்வரத் திருவிழாவுக்குப் பயணித்தல் மூலம் ஒரு குழுவினர் ஒன்றாகப் பயணித்தல், உணவு பகிர்ந்துண்ணல், சுகமில்லாத ஒருவரைக் கவனித்தல், நின்று கொண்டு பயணிப்பவருக்கு இருக்க இடம் தருதல், ஆண் பெண் பேதமின்றி ஒன்றாகத் தீர்த்தமாடி ஈர உடையுடன் நீர் எடுத்து வந்து அபிஷேகம் செய்தல் போன்ற நடத்தைகளில் நாம் தேர்ச்சி பெற்றோம்.

பாடசாலையில் நடராஜர் ஆலயம் அமைத்தபின் நாள்தோறும் கோயில் பூசையுடன் கல்லூரி ஆரம்பமாகும் கோயிலில் பூஜை



தொடங்கும் நேரம் முதல் தேவாரம் ஓதிப் பூஜை முடியும் நேரம் வரையான காலப்பகுதியில், அனைவரும் அந்தந்த இடங்களில் அசையாது நிற்கும் கோலம், ஒரு பெரிய வெளியில் இடம்பெறும் பிரமாண்டமான நாடகத்தின் உறை நிலையை நினைவுபடுத்தும்.

அக்காலத்தில் கல்லூரி சிவராத்திரி, நால்வர் குருபூஜை, நவராத்திரி ஆகிய விழாக்களையும் முறைப்படி நடத்தி வந்தது. சிவராத்திரி தினத்தில் பல மாணவர் சமய தீட்சை பெற்றனர். இந்த நடைமுறையில் பயின்று வந்த மாணவர் வெளிநாட்டிற்குச் சென்றபோதும் "ரிச்மண்ட் ஹில்" பிள்ளையார் கோயிலில் 12ம் திருவிழாவை நடத்தி வரும் சிறப்பு நிரந்தர ஆளுமை மாற்றத்தின் எதிரொலியாகும்.

"Give me a good head master and I will give you a good school"

என்று தெரியாமலா சொன்னார்கள்?

கல்லூரியில் அக்காலத்தில் நடைபெற்ற இணைபாடவிதானச் செயற்பாடுகள் ஒரு மாணவரின் ஆளுமை விருத்தியிலும் சமூக மயமாதல் செயற்பாட்டிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தின. கல்லூரி ஒன்றின் பிரதான நோக்கம் இளையோரைச் சமூக மயமாக்கலுக்கு உள்ளாக்குவதே என அவை நிறுவின. சமூக மயமாக்கல் என்பது தரப்பட்ட பண்பாட்டுப் பின்னணியில் பிள்ளைகள் முதிர்ச்சியடைந்தோருக்கான நடிபங்கினை ஏற்க ஆயத்தமாதல் எனலாம். இச் செயல் நெறியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைப் பாங்குகள், விழுமியங்கள், வழமைகள், கருத்துக்களின் வடிவங்கள் என்பவை கற்பிக்கப்படும்.

1968ம் ஆண்டு இலங்கைக் கலைக் கழக நாடகப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதற்பரிசு பெற்ற மகாஜனாக் கல்லூரியின் கோமகனும் குருமகனும் என்ற நாடகத்தை மட்டக்களப்பில் பார்த்த

பண்டிதர் ஆ. சபாபதிப்பிள்ளை அவர்கள், அந்த நாடகத்திற்கு எழுதிய விமர்சனத்தின் இறுதியில் இவ்வாறு கூறுகிறார்.

"உயர்தர வகுப்பில் பயிலுகிற மாணவர்களும் மாணவிகளும் கலந்து நடித்த போதிலும் அவர்கள் தங்களுடைய உயரிய பண்பாட்டை மேடையரங்கிலும் வெளியிலும் பாதுகாத்து ஒழுகினர். இவ்வொழுக்கம் பெற்றோரிடமிருந்து மாத்திரமல்ல, அவர்கள் படிக்கும் பாடசாலை ஆசிரியர்களுடைய முன்மாதிரியான நடத்தையாலும் உபதேசத்தாலும் வந்தது என்பது சொல்லாமலே விளங்கும். அவைகளுக்கு மேலாக

"நிலை மக்கள் சாலவுடைத்தெனினும் தானே
தலை மக்கள் இல் வழி இல்"

என்பதற்கேற்ப, இக்கல்லூரியாகிய சேனையை நடத்திச் செல்கின்ற தானைத் தலைவராகிய அதிபரின் திறனைச் சொல்லாமற் சொல்லி விட்டது. ஆசிரியர்கள் பலரையும் தலைவரையும் நாமறியாதுவிடினும் அவர்களது மாணவரின் நடத்தையைக் கண்டு அதிபரையும் ஆசிரியரையும் மெச்சியாகவேண்டும்"

இந்த நாடகத்தில் நான் பிரதான பாத்திரமேற்று நடித்திருந்தேன் என்பது இன்றும் எனது சுய மதிப்பை உயர்த்தும் விடயம்.

பாடசாலையில் இருந்து போஷிப்பைப் பெறும் சிறுவர்கள் சமூகத்திக்குள் சேர்ந்து சமூகத்தைப் போஷிப்பார்கள். சமூக முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இயங்குவார்கள் மீண்டும் சமூகத்தின் பங்காளியாக மாறும் அவர்கள் பாடசாலையைப் போஷிப்பார்கள் என்ற கருத்தை இவ்விடத்தில் நினைவு கூரல் நலம்.

இந்நாட்டில் இசை நாடகங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்த காலப்பகுதிவரை பெண்கள் நாடகத்தில் நடிக்கும் வழக்கம் மிக



அரிதாகவே இருந்தது. இசை நாடகங்களில் கன்னிகா பரமேஸ்வரி என்ற ஒரு பெண் நடித்தமை மிக முக்கியசெய்தியாக இருந்தது. 1960களில் மகாஜனா நாடக வளர்ச்சியில் மிக உன்னத நிலையில் இருந்த போது கலைக் கழக நாடகப் போட்டிகளில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் தேசிய மட்ட முதலிடத்தைப் பெற்றபோது, ஆண்களும் பெண்களும் சேர்ந்து நடித்தமை • மாணவர்களின் உணர்வுகளைச் சமநிலைப்படுத்துவதில் மகாஜனா பெற்ற வெற்றியையும் சுட்டியது. இந் நாடகங்களில் காதல் சம்பந்தப்பட்ட விடயங்கள் தாராளமாக வந்தன. அஸ்தினபுரி வேந்தன் சந்தனு யமுனா தீரத்தில் பரிமளகந்தியைக் கண்டு காதல் கொள்கின்றான். கிணற்றில் வீழ்த்தப்பட்ட தேவயானியை யயாதி மன்னன் தூக்கிவிடுகின்றான். ஆயினும் நடிகர்கள் சகோதர உணர்வுடன் நாடகத்தை நாடகமாக நடித்தனர். இந்த நுணுக்கமான உளவியல் கையாளுகையைக் கதிரேசர் பிள்ளையும் ஜெயரத்தினமும் இணைந்து செயற்படுத்திய திறமையை இப்போது நினைத்துப் பார்க்கும்போது வியந்து போகிறேன்.

நாடகங்கள் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்காக மட்டக்களப்பு முதலிய இடங்களுக்குச் செல்லும். நாடக ஆசிரியர் கவிஞர். செ.கதிரேசர்பிள்ளை அவர்களுடன சங்கீத ஆசிரியை செல்வி நாகம்மா கதிர்காமர், நடன ஆசிரியர் திரு இராஜரத்தினம், சித்திர ஆசிரியர் கலாகேசரி ஆ.தம்பித்துரை ஆகியோரும் ஒப்பனை உதவிக்காக திருமதி ச.கனகேஸ்வரனும் எம்முடன் இணைந்து பயணிப்பர். பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போக முடியாது என இந்த ஆசிரியர்கள் எப்போதாவது பின்வாங்கியதாக எனக்கு நினைவில்லை. ஒரு நிகழ்வில் வெற்றி பெறுவதற்காக உன்னதத்

திறமையுள்ள ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து எவ்வாறு செயற்பட முடியும் என்பதை மாணவராகிய நாம் நாடகத்தினூடு கற்றுக் கொண்டோம். கலாகேசரி அவர்கள் எவ்வளவு திறமைசாலியாக இருந்த போதும் நாடகம் என்று வரும்போது கவிஞர் அவர்களின் ஆலோசனையின் படியே தான் மேடை அமைப்பைச் செய்வார். இந்தக் காட்சியில் கல்யாணியில் தான் பாடல் வரவேண்டும்'' என்ற கவிஞர் சொன்னால் செல்வி கதிர்காமர் இந்த விருப்பதனைச் செம்மையாக நிறைவேற்றுவார். நாங்கள் அனைவரும் ஒரு குடும்பம் என்ற உணர்வு அதற்குள் இறுக்கமாக இழைபோடியிருக்கும். இதுவே மகாஜனாவின் வெற்றிகளை இலகுவாக்கியது.

வினைத்திறனுள்ள ஒரு ஆசிரியர் பிள்ளைகளைப் பின்வரும் வழிகளில் தயார் செய்வார் என Daniel Levine என்பவர் கூறியுள்ளார்.

1. அமைதியாகவும் ஒழுங்காகவும் இருக்க
2. நேரம் கடமை தவறாது இருக்க
3. சட்டத்திற்குக் கீழ்ப்படிய
4. மற்றையோரின் உரிமையை மதிக்க
5. குழுவாக வினைத்திறனுடன் செயற்பட

பொற்காலத்து மகாஜனாவின் நாடகங்கள் எம்மை இவ்வாறெல்லாம் தயார் செய்தன என நான் துணிந்து கூறுவேன்.

கல்லூரி செயற்படுத்திய மிக முக்கியமான சமூக மயமாக்கற் செயற்பாடுகளில் மற்றொன்று யாழ்ப்பாணம் வரும் அறிஞர்கள், சான்றோர் அனைவரையும் கல்லூரிக்கு அழைத்து மாணவர் மத்தியில் பேசச் செய்தலாகும். மகாஜனாவின் ஒரு பத்துவருடம் படிக்கும் மாணவர் அக்காலத்தில் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் பிரபல்யமாக இருந்த அறிஞர்கள். அரசியல்வாதிகள் சமயத்தலைவர்கள் அனைவரையும்



அவர்களது கருத்துக்களினூடு அறிந்திருப்பார். இவ்வாறு வரும் அறிஞர்கள் கல்லூரி வாசலில் வைத்து எமது பண்பாட்டுக்கமைய மாலையிட்டு ஆரத்தி சுற்றி வரவேற்கப்படுவர். மாணவர் தமது சொந்த வாழ்வின் இலக்குகளைத் தீர்மானித்துக் கொள்ள இவ்வறிஞர்கள் சந்திப்புக்கள் பெரிதும் உதவின. அதே நோக்கத்தைப் பாடசாலையின் வளம் மிகுந்த நூலகம் மேலும் உறுதி செய்தது.

1958இல் இந்நாட்டில் முதல் முறையாக இனக் கலவரம் ஒன்று வெடித்தது. மனிதர்கள் பதகளிப்பு நிலையை உணரும்போது மற்ற மனிதர்களோடு சேர்ந்து இருக்க விரும்புகிறார்கள் என்று உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். கவலை குற்ற உணர்வு ஆகிய உணர்ச்சிகள் இருக்கும்போது மற்ற மனிதர்களின் ஒத்துணர்வு வழிகாட்டல், மீளவலியுறுத்தல் ஆகியவை எம்மைத் திரும்பவும் ஆரோக்கியமாக வாழ வழிப்படுத்துகின்றன. பய முறுத்தப்படும் போதும் மனிதன் மற்றவர் உதவியை நாடிக் கூட்டத்தினுள் செல்கின்றான் என்று உளவியல் பரிசோதனைகள் நிறுவியுள்ளன.

இந்தப் பின்னணியில் 1960இல் மகாஜனாவில் நடைபெற்ற பொன்விழாக் கொண்டாட்டங்கள் சமூகத்தின் ஆரோக்கியத்திற்குப் பெரும் கை கொடுத்தலாயிற்று. சமூகம் பாடசாலையுடன் முற்றாக இணைந்துவிட்ட அற்புதத்தை அப்போது என்னால் தரிசிக்க முடிந்தது. நாம் பாதுகாப்பற்ற உணர்வுடனும் சந்தேகத்துடனும் இருக்கும் போது மற்றவர்களின் மதிப்பீடுகள் உள்வாங்கல்கள் நம்பிக்கைகள் உணர்வுகள் ஆகியவற்றோடு அடிக்கடி எம்மை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வோம். இத்தகைய வடிகால் ஒன்றைப் பொன்விழா நிகழ்வுகள் திறந்துவிட்டிருந்தன. பொன்விழாவில் சேகரிக்கப்பட்ட பணம் கல்லூரி

விருத்திக்குச் செலவு செய்யப்பட்டமையை அடுத்த படியில் வரும் ஒரு நன்மையாகவே கொள்ளலாம்.

ஆகவே பெரியோர்களே பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான இணைப்பு மிகவும் வலுவானது. "சமூகம் என்பது கூட்டு அடையாளம் கொண்டதான உணர்வுள்ள மக்கள் குழு" என்று J.W. Getzels கூறுவார். பாடசாலையால் ஒரு சமூகத்தின் மீது ஆக்கபூர்வமான விளைவுகள் ஏற்படுகின்றன. இந்த விளைவுகளால் கல்லூரியும் நன்மை பெறுகின்றது. ஸ்ரான்போட் பல்கலைக்கழக உளவியலாளரான Albert Bandura என்பவர் இக்கருத்தைப் பின்வருமாறு கூறுவார். "ஆசிரியருக்கும் சமூகத்திற்கும் இடையிலான இடைவினை மீளும் தாக்கத் தீர்மானமாகும். இந்நிலையில் இரு திறத்தாரும் ஒருவருக்கொருவர் உதவுவதுடன் தம்மையும் சீராக்கிக் கொள்கின்றனர்."

இன்று பாடசாலை என்பது சமுதாயத்தக்கும் இளம் தலைமுறையினருக்கும் அவசியமாக வேண்டப்படும் நிறுவனமாக 21ம் நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நின்று நீடிக்க வேண்டுமானால் மாணவனின் சமூக மயமாக்கலில் அது கவனம் செலுத்த வேண்டும். 1988ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு தகவலின்படி குடாநாட்டில் 5 - 9 வயதில் 7 வீதமானோரும் 10 -14 வயதில் 6.1 வீதமானோரும் 15 - 19 வயதில் 46.8 வீதமானோரும் பாடசாலைக்குச் செல்லவில்லை. இவர்கள் பாடசாலை என்பது தேவையற்ற ஒரு நிறுவனம் எனக் கருதியிருக்கக் கூடும். பாடசாலை செல்லாதோரின் நூற்றுவீதம் மேலும் அதிகரித்து வருவதாகவே கணிக்கப்படுகிறது. பாடசாலை செல்வோரே சிறந்த சமூக மயமாக்கல் பண்புகளை இன்று பெற்றுக் கொள்ளாத நிலையில் பாடசாலை செல்லாதோர் தொகை அதிகரித்து வரும்போது



எதிர்காலத்தில் இச்சமூகத்தில் மனிதர்கள் மனிதர்களாக வாழ முடியாத ஒரு பெரும் நெருக்கடி (Crisis) ஏற்பட வாய்ப்புண்டு.

பாடசாலை செல்லும் மாணவர் சத்தியம், அன்பு சமாதானம் சரியான நடத்தை, அஹிம்சை ஆகியவற்றில் தேர்ச்சி பெறுமாறு கல்வி போதிக்கப்பட வேண்டும் என சத்திய சாயி விழுமியக் குழுவினர் உரத்துக் கூறுவதில் அர்த்தம் உண்டு. ஆகவே பயனுறுதியும் வினைத்திறனும் சமூகப் பொருத்தப்பாடும் கொண்ட பாடசாலைகளைக் கொண்ட சமுதாயமே அடுத்த தலைமுறைக்குத் தேவையானது.

மகாஜனாவைப் பொறுத்தவரை இது புதிய விடயம் அல்ல என்பதையே நாம் இதுவரை பார்த்தோம். ஆகவே அதிபர் T.T.ஜெயரத்தினம் அவர்கள் காட்டிய பாதையில் நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டிய காலம் இது.

அன்று அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயல்காற்றில் கொம்புலுப்பிப் பூக்களினைக் கொட்டும் குடைவாகை

நம் பெரிய வெற்றிக்கு நாலு மலர் சூட்டியது இன்றும் என்றும் அது அவ்வாறு சூட்ட

வாழ்த்தி நினைவுப் பேருரைக்கான சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறி அமைகிறேன்.

## துணை நூல்கள்:-


குலசேன கே.ஜீ - பாடசாலை முகாமை,
1989 தேசியக்கல்வி நிறுவக வெளியீடு

கந்தையா. வீ - காங்கேயன் கல்வி மலர்
1985

Davidoff L. Iinda. L. - Introduction to psychology
1987

கதிரேசர்பிள்ளை செ. - பாரதம் தந்த பரிசு
1980

வரதராசா. நா - ஆசிரியத் தொழில்
2001

சபாபதிப்பிள்ளை ஆ. - மகாஜனன்
1968

Sabaratnam . N - ஜெயரத்தினம் உருவச் சிலை திறப்புவிழாச்
1978 சிறப்பு மலர்

Sivajah. N. - School aged children in Jaffna District
1998

Carole Alderman - Sathya Sai Edincation in Hurman Value
1996

குணசேகரவிஜேசிறி பி.- பாடசாலை முகாமைத்துவம்
1996

மகாகவி 1996 - ஜெயரத்தின தீபம்

அனந்தராஜ் வல்லை. அ - முகாமைத்தவ நுட்பங்கள்
2001

சில்வா எஸ்.டீ.எஸ் - பாடசாலையின் கரும ஒழுங்கமைப்பு
1989 தேசிய கல்வி நிறுவக வெளியீடு

# கல்லூரிக் கீதம்

(ஜன கண மன . . . . . என்ற மெட்டு)

ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம் பணி நினைவோம்.

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்.

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜனத் தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா.

– புலவர் நா. சிவபாதசுந்தரனார் –

டெக்ரோ கொம்பியூட்டர் பிறின்ட், மயிலணி, சுன்னாகம்